## இணைப்பு-1

## 11,12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான விதிமுறைகள்:-

-----

1. மாவட்டத்திலுள்ள மேனிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வதற்குத் தகுதியுடையவராவார். அனைத்து மாணவர்களுக்கும் போட்டி பொதுவானதாகும்.

2. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு மாணவர் வீதம் 3 மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். அவர்களை பள்ளியே தெரிவு செய்து அனுப்புதல் வேண்டும். போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் இணைப்பில் உள்ள படிவத்தைப் படியெடுத்து ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே தமிழில் பூர்த்தி செய்து, ஒப்பமிட்டு, பள்ளி தலைமையாசிரியரிடம் சான்றொப்பமும், முத்திரையும் பெற்று போட்டி நடைபெறும் இடத்தில் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்(பொ.) அவர்களிடம் அளித்தல் வேண்டும். போட்டி நாளன்று காலை 8.30 மணிக்குள் மாணவர்கள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும். போட்டி ஆரம்பித்தவுடன் தாமதமாக வரும் மாணவர்கள் போட்டியில் பங்குபெற அனுமதிக்கப்பெற மாட்டார்கள். மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும்.

3. ஒரு மாணவர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும். இதற்கு முன்பு இப்போட்டிகளில் பங்கேற்று ஒரு மாணவர்/மாணவி தொடர்ந்து ஒரே போட்டியில் பங்குபெற்று பரிசுகள் பெற்றிருப்பின் மீண்டும் அதே போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார். மூன்று போட்டிகளும் 30.08.2018 அன்று நடத்தப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பெறும்.

4. போட்டிக்கான நேரம் பின்வருமாறு:-

| | | |
|---|---|---|
| அ) | கவிதைப் போட்டி | முப 10.00 - 11.30முப |
| ஆ) | கட்டுரைப் போட்டி | முப 12.00 - 01.30முப |
| இ) | பேச்சுப் போட்டி | பிப 2.30 மணி முதல் போட்டி முடியும் வரை |

5. போட்டிகளுக்கான தலைப்புகள் பங்கேற்கும் மாணவர்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படமாட்டாது. நடுவர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் போட்டி நடைபெறும் நேரத்தில் அறிவிக்கப்பெறும்.

6. பரிசுத்தொகை (மாவட்ட அளவிலான போட்டிக்கானது)

| வ.எண் | போட்டி | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|---|
| 1. | கவிதை | ரூ. 10000 | ரூ. 7000 | ரூ. 5000 |
| 2. | கட்டுரை | ரூ. 10000 | ரூ. 7000 | ரூ. 5000 |
| 3. | பேச்சு | ரூ. 10000 | ரூ. 7000 | ரூ. 5000 |

7. மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முதல் பரிசுபெறும் மாணவர்கள் சென்னையில் நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள பரிந்துரைக்கப்படுவர். மாநில அளவிலான போட்டிக்கான விவரம், சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலிருந்து பின்னர் அறிவிக்கப்பெறும்.

<u>மேலும் விவரங்களுக்கு</u>: தொடர்பு எண்கள்: 0416-2256166,